


சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க.நகர் தொகுதி பகுதி வட்டம் மறுசீரமைப்பு தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு பகுதி வட்டம் மறு சீரமைப்பு பற்றி எடுத்துக் கூறி ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், ப. தாயகம் கவி, கே எஸ் ரவிச்சந்திரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் செ. தமிழ்வேந்தன், எம் சாமி கண்ணு, இசட். ஆசாத்,சரிதா மகேஷ் குமார் எம்.சி, மற்றும் நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்.

# திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் - கிழக்கு ஆகிய ஒன்றியங்களின் நிர்வாகம் வாரியாக மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை



கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமை கழக பிரதிநிதிகள் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா Ex MLA, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றியம், திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் ஆகிய நிர்வாகங்களில் மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

**இன்று நாள் 12-09-2026 சனிக்கிழமை**

| நேரம் | நிர்வாகம் | செயலாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| மாலை 4 மணி | திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | ஆர்.ஜெயசீலன் | லட்சுமி மஹால் காக்களூர் |
| மாலை 6 மணி | திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | சே.பிரேம் ஆனந்த் | DKC மஹால் வேப்பம்பட்டு |

மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்

**ஆவடி சா.மு.நாசர்**

**செயலாளர் - திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக**

### காலை உணவுத் திட்ட பெயர்ப் பலகைக்கு

# தலைமை ஆசிரியர்களை செலவு செய்யச் சொல்வதா?

### ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் கண்டனம்!

புதுக்கோட்டை, செப்.12

காலை உணவு விரிவாக்க திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என பெயர் மாற்றம் செய்து அதற்கான பெயர் பலகை அமைப்பதற்கு நிதி ஆதாரம் எதுவும் வழங்காத நிலையில் தலைமையாசிரியர்கள் உடனடியாக பெயர்பலகை வைத்து புகைப்படத்தினை அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிடுவது ஆசிரியர்களுக்கு வேதனையை தருகிறது என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:



தமிழ்நாடு முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மை குழு மறு கட்டமைப்பு செய்ய பெற்றோர் விழிப்புணர்வு கூட்டம் நடத்த வேண்டும். அதனைத் தொடர்ந்து மறு கட்டமைப்பு கூட்டம்நடத்த வேண்டும். புதிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என கூறி விடுமுறை நாட்களிலும் கூட்டம் நடத்துவது, பார்வையாளர்களாக தொலைதூரத்தில் உள்ள பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பது போன்ற செயல்களில் ஆசிரியர்களை தொடர்ந்து விடுமுறை நாளில் பணியில் ஈடுபடுத்துவது ஏற்புடையது அல்ல. இது ஆசிரியர்கள் மத்தியில் பெரும் பதற்றத்தினை உருவாக்கி உள்ளது.

அது மட்டுமல்லாமல் காலை உணவு விரிவாக்க திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் என பெயர் மாற்றம் செய்ததை வரவேற்கிறோம். அதே வேலையில் அதற்கான பெயர் பலகை அமைப்பதற்கு நிதி ஆதாரம் எதுவும் வழங்காத நிலையில் தலைமையாசிரியர்கள் உடனடியாக பெயர்பலகை வைத்து புகைப்படத்தினை அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகள் உத்தரவிடுவது வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த ஆட்சியில் பெயர் பலகை நிறுவும் செலவினை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்றுக் கொண்டன.

தற்போது ஆசிரியர்கள் தனது சொந்த செலவில் பெயர்ப்பலகை அமைப்பது என்பது ஆசிரியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது எனவே தமிழக அரசு உடனடியாக அதற்கான நிதி ஆதாரம் பற்றி தெளிவாக அறிவிக்க வேண்டும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### படப்பை ஆ. மனோகரன்– ஏ. வந்தேமாதரம் வரவேற்புரை! குன்றத்தூர் மத்திய

# ஒன்றியச் செயலாளர் திருமுடிவாக்கம் இ.மணி இல்ல மணவிழா!

### தா.மோ.அன்பரசன் தலைமை! டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி – எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துரை!

காஞ்சிபுரம், செப். 12-

குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் திரு முடிவாக்கம் இ.மணி - ம.விஜயலட்சுமி ஆகியோரின் புதல்வர் வழக்கறிஞர் ம.தமிழரசனுக்கும், நந்தம்பாக்கம்,மு.தர்மலிங்கம்-த. பரிமளா ஆகியோரின் புதல்வி வழக்கறிஞர் த. பார்கவிக்கும் மணவிழாநாளை (13.09.2026-ஞாயிற்றுக்கிழமை) காலை 7.30 மணயளவில் மாங்காடு ரோடு, பரணிபுத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணவேணி பேலஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (12.09.2026-சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை வகித்து நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.



தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ. மனோகரன், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ. வந்தேமாதரம் ஆகியோர் வரவேற்புரையாற்று கின்றனர்.

சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி, வந்தேமாதரம், மு.சுப்ரமணி, மு. செல்வமணி, க. ஏழுமலை, வாசுகி மகேஷ், வே. அரி, மா. பரிமேலழகன், எ.விஸ்வநாதன், கே.என்.சி. சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில் டி.ஆர். பாலு எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழாவில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., மீ.அ.வைதியலிங்கம், கு.செல்வப்பெருந்தகை, க.சுந்தர், மா.சுப்பிர மணியன்,ஆ.கிருஷ்ணசாமி, எஸ்.ஆர்.ராஜா,இ. கருணாநிதி வரலட்சுமி மதுசூதனன், சி.வி.எம்.எழிலரசன், எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, த.துரைசாமி,து.மூர்த்தி, வெ.விஸ்வநாதன், மேயர் க.வசந்தகுமாரி, துணைமேயர் கோ.காமராஜ்,. வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல். இதயவர்மன், வி.பி.என்.வெங்கட்ராமன்,தாயகம் கவி, ஆதிமாறன்,பிரபு கஜேந்திரன், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், பாலவாக்கம் த.விஸ்வநாதன், ஜி. சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன்,பெருங்குடி எஸ். வி. ரவிச்சந்திரன், அ.தமிழ்மாறன், பி.டி.சி.ஜி. செல்வராஜ்,இரா.பொன்னுராம், என்.நவீன், சாய் ஜெய்காந்த் பாரதி,

ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, எஸ்.டி.கருணாநிதி, ந. கோபால், பையனூர் எம். சேகர், ஜி.கே.ரவி (எ) விவேகானந்தன், பி.சந்தானம், எம். டி.லோகநாதன், கே.பி. ராஜன்,

ஜெ.சண்முகம், எஸ்.நரேந்திரன், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்திய மூர்த்தி,

எம்.கே.டி.கார்த்திக், ஆர். சதீஷ்குமார், த. வினோத்குமார், என்.சந்திரன், ப.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக் குமார்,எஸ். சேகரன், எஸ்.இந்திரன், டி. காமராஜ், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன்,.இ.எஸ். பெர்னாட், ஆர்.சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஒன்றியச் செயலாளர் இ. மணி, ம. விஜயலட்சுமி மணி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.




ஒன்றிய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத போக்கையும், த.வெ.க. அரசின் தனியார்மய கொள்கையையும், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக சீர்கேட்டையும் கண்டித்து, மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்ட வாயிற் கூட்டம் பல்லவன் இல்லம் முன்பாக நடைபெற்றது. இக்கூட்டம் தலைவர் கோ.மோகன்குமார் தலைமையில் தலைமை நிலையச் செயலாளர் அ.தங்கராஜ் வரவேற்புரையில் சங்க அமைப்புச் செயலாளர் நா.செல்வகுமார் முன்மொழிந்தும், பிரச்சார செயலாளர் மு.ஜோதி வழிமொழிந்தும், தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழிய முன்னேற்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இதில் பேரவை அமைப்புச் செயலாளர் வேலுச்சாமி, பேரவை இணைப் பொதுச் செயலாளர் விஜயகுமார், உழைப்பாளி இதழின் துணை ஆசிரியர் ஆ.சி.அருணகிரி, பேரவையின் அலுவலக செயலாளர் ப.பன்னீர்செல்வம், சுந்தரமூர்த்தி, வி.மகேந்தின், சங்கம் முன்னோடிகள் என 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் நன்றி கூறினார்.

### ஒன்றிய, மாநில அரசுகளின் போக்குவரத்து தொழிலாளர் விரோதப் போக்கை கண்டித்து

# பல்லவன் சாலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்ட வாயிற் கூட்டம்!

### மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பில் நடைபெற்றது!

சென்னை, செப்.12

ஒன்றிய, மாநில அரசுகளின் தொழிலாளர் விரோத போக்கையும், த.வெ.க. அரசின் தனியார்மய கொள்கையையும், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக சீர்கேட்டையும் கண்டித்து, மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியம் முன்னேற்ற சங்கம் சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்ட வாயிற் கூட்டம் நேற்று (11.09.2026 வெள்ளிக்கிழமை) மாலை, பல்லவன் சாலையில், பல்லவன் இல்லம் முன்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைவர் கோ.மோகன்குமார் தலைமை தாங்கினார். தலைமை நிலையச் செயலாளர் அ.தங்கராஜ் வரவேற்புரையும், சங்க அமைப்புச் செயலாளர் நா. செல்வகுமார் முன்மொழிந்தும், பிரச்சார செயலாளர் மு.ஜோதி வழிமொழிந்தும் பேசினர்.

இக்கூட்டத்தில் தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன், தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழிய முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் த.சரவணகுமார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

இக்கூட்டத்தில் பேரவை அமைப்புச் செயலாளர் வேலுச்சாமி, பேரவை இணைப் பொதுச் செயலாளர் விஜயகுமார், உழைப்பாளி இதழின் துணை ஆசிரியர் ஆ.சி.அருணகிரி, பேரவையின் அலுவலகச் செயலாளர் ப.பன்னீர்செல்வம், சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சுந்தரமூர்த்தி, நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரிய தொ.மு.ச, தொலைத் தொடர்பு தொ.மு.ச, அமைப்புசாரா தொ.மு.ச. மாநகராட்சி தொ.மு.ச. அரசு விரைவு போக்குவரத்து கழக தொ.மு.ச. நிர்வாகிகள், நிர்வாக பணியாளர் சங்கப் பொதுச் செயலாளர் வி.மகேந்தின், மா.போ.க. ஊழியர் முன்னேற்ற சங்கத்தின் ஓய்வுபெற்ற நிர்வாகிகள் தலைமைச் சங்க நிர்வாகிகள், பணிமனை செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் சங்கம் முன்னோடிகள் என 1500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சங்கப் பொருளாளர் கி.சீனிவாசன் நன்றி கூறினார்.

### சென்னை ரிப்பன் கட்டட வளாகத்தில் ஆசிரியர் தினவிழா:

# பள்ளிகள் அளவில் நடைபெற்ற மாபெரும் விளையாட்டுப் போட்டி!

### வெற்றி பெற்ற 515 ஆசிரியர்களுக்கு மேயர் பிரியா பரிசுகள் வழங்கினார்!

சென்னை,செப்.12-

மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகைக் கூட்டரங்கில் ஆசிரியர் தின விழா நேற்று (11.09.2026) நடைபெற்றது. இவ்விழாவில் இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., கல்வி அலுவலர் திருமதி ஜெ. வசந்தி மற்றும் உதவி கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



இவ்விழாவில் ஆசிரியர்களுக்கு பள்ளிகள் அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 515 ஆசிரியர்களுக்கு மேயர் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில் ஆண்டுதோறும் ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு சென்னை பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு பிரிவாகவும், உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு பிரிவாகவும் விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மேயர் பேசியதாவது :

ஆசிரியர் தின விழாவினை முன்னிட்டு, அனைத்து ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி வாழ்வின் வழிகாட்டியாகவும் ஆசிரியர்கள் திகழ்கின்றனர். ஆசிரியர் பணி மகத்தானது. ஒவ்வொரு மாணவரின் வளர்ச்சியிலும் ஆசிரியரின் பங்கு உள்ளது. ஒவ்வொரு மாணவரும் வளர்ந்து பின்னாளில் உயர் பதவிக்கு வந்தாலும், நல்ல தொழில் செய்து முன்னேறினாலும் தனது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களை என்றும் நன்றியோடு நினைவு கூர்வார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 417 சென்னை பள்ளிகள் உள்ளன. இவற்றில் சிறந்த உட்கட்டமைப்பும், மாணவர்களுக்கான பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு முன்னேற்றமான கல்வியை வழங்கி வருகிறது. இதில் படிக்கும் மாணவர்கள் தங்களது ஆசிரியர்களை முன்மாதிரியாகக் கொண்டு முன்னேற்றத்தை நோக்கி செல்கின்ற வகையில் ஆசிரியர்கள் பணியாற்றிட வேண்டும். தற்போது தொழில் நுட்ப வளர்ச்சி பெருகி வரும் நிலையில் இதனை மாணவர்கள் நல்ல வழியில் பயன்படுத்திக் கொள்வதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டிட வேண்டும் எனப் பேசினார்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம்!

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதி கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை செப்.12

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சை கண்டித்து சென்னை வடகிழக்கு கிழக்கு வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (1292026 சனிக்கிழமை) காலை 9 :00 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் அவர்கள் முன்னிலை வகிக்கிறார்.

எனவே திருவொற்றியூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட, அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் ஆணவப் பேச்சு: இன்று கண்டன ஆர்ப்பட்டத்தில்

# தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

### பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., – கோ.சு.மணி வேண்டுகோள்!

சென்னை,செப்.12-

தியாகராயர் நகர் கிழக்கு, மேற்கு பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., - கோ.சு. மணி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை மத்திய சிறையில் மிசா கொடுமைகளை அனுபவித்த கழகத் தலைவர் தியாகத்தை சட்டமன்றத்தில் தவறாக பேசிய விஜய் கண்டித்து 12.9.2026 இன்று காலை 9:30 மணி அளவில் சென்னை சைதாப்பேட்டை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் சென்னை தென்மேற்கு மாவட்டம் செயலாளர் மயிலை.த.வேலு அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது .

எனவே தியாகராய நகர் தொகுதிக்கு உட்பட்ட மாநில மாவட்ட நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக செயலாளர்கள் பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட கழக உறுப்பினர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி சார்ந்த வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் BLA 2 BDA BLC சார்ந்த நிர்வாகிகள் மற்றும் ஆற்றல் மிக்க செயல்வீரர்கள் வீரமிக்க வீராங்கனைகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு மேற்கு பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி., - கோ.சு.மணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

### முதலமைச்சர் விஜய்யின் ஆணவப் பேச்சைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்;

# இராயபுரம் 49வது வட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் அறிக்கை!

சென்னை, செப்.12-

இராயபுரம் 49வது வட்டச் செயலாளர் க.கலைச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சை கண்டித்து சென்னை கிழக்கு சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (12.9.2026 சனிக்கிழமை) காலை 9 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெறுகிறது.

கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் தலைமையில், மாவட்ட செயலாளர்கள் பி.கே. சேகர் பாபு, ஆர்.டி. சேகர், மாதவரம் எஸ். சுதர்சனம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் நமது 49 வட்டத்திற்குட்பட்ட பகுதி நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பாகமுகவர்கள். கழக முன்னோடிகள் இளைஞரணி தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.